Reg'sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

3 JUN 1971

ஜோன்ஸன்
அவுட்போட் மோட்டர்
யந்திர உதிரிப்பாகங்கள்
(6-H. P. — 20-H. P.)
எம்மிடம்
இப்பொழுது
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி: இரத்தினம்ஸ்'
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

மலர் 13 வைகாசி 19 ரபி:ஆகி 8 (2—6—71) புதன்கிழமை இதழ் 110

‘இலங்கையின் குழப்பங்களுக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண அரசு விரும்பவில்லை வேலையில்லாப் பிரச்னையைத்தீர்க்கவே விரும்புகிறது’

கனடாவில் உள்ளூராட்சி அமைச்சர் பீலிகஸ்

கண்ணோய் இலங்கைக்கு கப்பலில் வந்ததாம்

கோட்டை, செவ்வாய் கொழும்புப் பகுதியில் பெருந் தொகையானோரைப் பீடித்திருக்கும் கண்ணோய் இந்தியாவில் பம்பாய், சென்னை ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது.

‘அக்யூட்கேடரால் சஞ்சக்டிவிடிஸ்’ எனப்படும் இந்நோய் பம்பாயிலிருந்து சென்னைக்கும் அங்கிருந்து இலங்கைக்கும் பரவியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. முன் ஒருபொழுதும் வந்திராத இந்நோய் கப்பல் பிரயாணிகள் மூலம் பரவியுள்ளதாக டாக்டர் டி. எஸ். துரைசாமி எனும் கண் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார். இவர் இக்கருத்தை இந்தியப் பத்திரிகை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்.

கண் எரிச்சலாலும், வலியாலும் வேதனைப்படும் இந்நோயுள்ளவர்கள் குளிர் சாதன அறைகளில் இருப்பதையும் சினிமா தியேட்டர் போன்ற கும்பலான இடங்களுக்குப் போவதும் இருக்கவேண்டும் என மேற்படி டாக்டர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினர் வெளியிட்ட தகவலின் படி ஏறக்குறைய இரு லட்சம் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்குச் சென்ற

[6-ம் பக்கம் பார்க்க]

வீதிகள் திருத்த

5 ஆண்டுத் திட்டம்

கோட்டை, செவ். வீதிகள்- நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை அமைப்பதற்கான 5 வருடத் திட்டமொன்றை நீர்ப்பாசன மின்சார, நெடுஞ்சாலை அமைச்சுத் தயாரிக்கிறது.

மேற்படி திட்டத்தின்கீழ் 5வருடங்களில் நிர்மாணிக்கக் கூடிய வீதிகளையே நிர்மாணிக்கவோ அல்லது திருத்தவோ அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

ஒட்டாவ, ஜூன் 1 இலங்கையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு ராணுவ ரீதியில் அரசு தீர்வு காண விரும்பவில்லையென்றும், வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவே விரும்புகிறதென்றும் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர். திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா இன்று இங்குதெரிவித்தார்.

கனடாவில் தற்போது விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஒட்டாவவில் நிருபர்களிடம் இப்படிக் கூறினார்.

வேலையில்லாப்' பிரச்னையைத் தீர்ப்பதன்மூலமே குழப்பங்களுக்கு தீர்வுகாண அரசுவிருப்பம்கொண்டுள்ளதென்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் சமீபத்திய குழப்பங்கள் சம்பந்தமாக பத்திரிகைகள் மிகைப்படுத்திக் கூறிவிட்டதாகவும் திரு. பீலிக்ஸ் கூறினார்.

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தகட்டடங்கள் மறுசீரமைப்புக்கு கனடாவிடமிருந்து பீலிக்ஸ் உதவிபெறவிருக்கிறார் இது தொடர்பாகக்கனடாப்பிரதமர் திருட்ருடோவைபீலிக்ஸ் இன்று சந்திக்கவிருந்தார்.

நெசவு உற்பத்தியாளர் ‘கோட்டா’ ரத்து!

கோட்டை, செவ். நெசவு உற்பத்தியாளர்களுக்கு வழங்கியிருந்த ‘கோட்டா’வை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு ரத்துச்செய்துள்ளது.

போதியளவு தையல் நிலயங்களோ போதிய தொழிலாளர்களோ இல்லாதஇந்த 53 உற்பத்தியாளர்கள் இயங்கி வந்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊழியர்கள்பற்றி பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருந்ததாம். இதனால் ஊழியர்கள் சேமலாப நிதிச் சட்டத்தை மீறியுள்ளார்களாம்.

திருக்கேதீச்சரம் பாலஸ்தாபனம்

மன்னார், செவ்வாய் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கும் கௌரியம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் வருகிற ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தாபனம் செய்ய திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை தீர்மானித்துள்ளது.

ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

மக்கள் அரசு பதவி ஏற்றபின்னர்

6,200 பட்டதாரிகளுக்கு இதுவரை வேலை!

கோட்டை, செவ்வாய் மக்கள் அரசாங்கம் பதவி ஏற்றபின்னர் 6,200 பட்டதாரிகளுக்கு வேலை வழங்கியிருக்கிறது.

இந்தத் தொகையில் 2500 பட்டதாரிகள் இப்போது வேலைசெய்து வருகிறார்கள். 3500பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின்கீழ் பயிற்சிபெற்று வருகிறார்கள்.

திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக நிரந்தரச்செயலாளர் திருகுணதிலகா தமது அறிக்கையொன்றில் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மக்கள் அரசாங்கம் பதவி ஏற்றபோது நாடெங்கிலும் ஒன்பதினாயிரம்பட்டதாரிகள் வேலையின்றி இருந்தார்கள். இப்போது 2800 பட்டதாரிகள் மட்டுமே வேலையில்லாதிருக்கிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

சமீபத்தில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் இந்தக் கணக்கெடுப்பில் அடங்கவில்லை.

நாளைமுதல் 500 பட்டதாரிகள் விசேஷ பயிற்சித் திட்டத்துக்குள்ளாக்கப் படுகிறார்கள்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் கைத்தொழிற் பிரிவுகள் தொடர்பாக மாவட்ட உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்காகவே இவர்களுக்கு இந்த விசேஷ பயிற்சி அளிக்கப்படுகிறது.

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வந்தவர்களில் சிலரே இந்த விசேஷபயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

H. M. V. கிறமபோன் 1 சவுண்ட்பொக்ஸ் (Extra) 20 றெக்கோட்ஸ் எல்லாம் நல்ல நிலையில், விலை ரூபா 200. விக்ரேஸ், 23, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். 3142

தேவை

கார்!

நல்ல நிலையில் உள்ள A/40 வோக்ஸ்வகன், அல்லது 203 உடன் தேவை. விலை மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3140 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 3140

10 லட்சம் பாடநூல் வெளியிடும்

கோட்டை, செவ்

இந்த வருடம் இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபனம் 10 லட்சம் பாட நூல்களை வெளியிடவுள்ளது.

இந்த 10லட்சம் பாடநூல்கள் வெளியீட்டுக்காக 30 லட்சம் ரூபா செலவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோலியம் கூட்டுத்தாபனம், சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அச்சுவேலைகளையும் இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபனம் எடுக்கவுள்ளது.

அறிவித்தல்

"சங்குவேலி பயிர்ச் செய்கைக் குழுவின் 1971-ம் 1972-ம் ஆண்டுக்குரிய தெரிவாளர் இடாப்பு மீளவும் சீர் செய்யப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு 1971-ம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 30-ம் திகதிவரைக்கும் ஒரு பிரதி சங்குவேலி ப. நோ. கூ. சங்கத்திலும் மறுபிரதி கமத்தொழில் சேவைகள் பெரும்பாக உத்தியோகஸ்தர் (D. O. A. S.) கந்தோரிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதை இத்தால் அறிவிக்கிறேன்" க. இரத்தினசிங்கம், செயலாளர். 2490

FOR SALE

32 bass crucinelli piano accodian in good condition. Colour pearl blue What offers. Owner bought a bigger accodian, Contact S Pancharatnam. Teacher, Urumpirai South, Urumpirai. 3145

நீடிப்பு

கோட்டை, திங்கள்

வெளிநாட்டிலுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்களை வெளியிட அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடுவை அரசாங்கம் நீடித்துள்ளது.

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 பி.ப. 2-00
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30க்கும் பி. ப 2-00 மணிக்கும்
எம்.ஜி.ஆர். — பானுமதி
நடித்த
மலைக்கள்ளன்
(புதிய கொப்பி)

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-00
★ சிவாஜி கணேசன் ★ பத்மினி
நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு
ஜெயலலிதா — மனோரமா
நடித்த
குருதட்சணை

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

ஹைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
தொழிலாளி

கிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
நீதிக்குப்பின் பாசம்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

கேள்விப் பத்திரம்

காரைநகர் சிவன்கோவில் ராசகோபுரம்

மேற்படி கோபுரத்தின் அத்திபாரம் போடப்பட்டிருக்கிறது. அத்திபாரத்திலிருந்து வியாழவரி முடியும் வரையிலும் கட்டுவதற்கும் கேள்விப்பத்திரங்களை விண்ணப்பிக்குமாறு கேட்கின்றேன். பாகுகல்லுகள் துவாரபாலகர்கள் தரைக்கல்லுகள் முதலியன வவுனியாக் கருங்கல்லுகளில் வேலை செய்து மற்றவை சீமந்து கொங்கிறீற்றிலும் அச்சுக் கல்லுகளாலும் கோவிலில் வைக்கப்பட்டிருக்கிற பிளானின்படி செய்யவேண்டும். சாமான்கள் கொடுக்கப்படும். சகல வேலைகளையும் செய்து பிளாஸ்ற்றறும்செய்து பிளானின்படி வேறு எவ்வித வேலையும் செய்ய வேண்டிய தன்மையில்லாது நிலபரதில் பாரம்கொடுத்தல் வேண்டும். குறித்தவேலையை எக்காலத்துக்குமுன் முடித்துக்கொடுப்பது என்பதை கேள்விப்பத்திரத்தில் காட்டவேண்டும். அக்காலத்துக்குள் கட்டாயமாகச் செய்யவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் திருத்தம் இல்லாது சொல்லிலும் இலக்கத்திலும் குறித்த விஷயங்களைக் காட்டி விண்ணப்பிப்பவரின் காகிதத்தில் சகல வேலைகளுக்கும் விண்ணப்பிப்பவர் தமது தொகையைக் காட்டி பத்திரத்தை நிரப்பி 1971-ம் ஆண்டு ஆனி மாசம் 15-ந் திகதிக்கு முன் சீல் பண்ணப்பட்ட தபால் உறையில் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டும். குறித்த கோவிலின் திருப்பணிச் சபையின் நிருவாகசபையின் தீர்ப்பு முற்றுனது. நிருவாக சபையால் ஏற்கப்பட்ட பத்திரத்தின் கேள்விக்காரன் நிருவாகசபை அறிவித்ததும் எவ்வித சுணக்கமுமில்லாது ஒப்பந்தம் முடிக்கவேண்டும். அவ்வண்ணம் செய்யத்தவறின் அவரின் கேள்வியை நிருவாக சபையார் தள்ளுபடிசெய்வார்கள்.

அ. நாகலிங்கம்
சம்பந்தர்கண்டி காரைநகர்
திருப்பணிச்சபையின்
நிருவாகசபையாரின்
2817 கட்டளைப்படி.

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி காலை 10-30
HELICOPTER SPIES
தினசரி பி ப. 3-00 க்கு
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப. 1-30
சிவாஜி-பத்மினி
நடித்த
ராஜா ராணி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10 30, பி. ப. 3-30
சிவாஜி - பண்டரிபாய்
நடித்த
திரும்பிப்பார்
(புதிய கொப்பி)

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2-00 &
4-15 p. m
David Hemmings
in
WALKING STICK
(Cinemascope - color)

ப. நோ. கூ. சங்கங்களில்

முற்பணவைப்புக்கடன்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாம்

மாவிட்டபுரம், செவ்

கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களை அரசு பொறுப்பேற்றதும் முற்பணவைப்புக்கடன் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாம்.

கூட்டுறவு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களை அரசு பொறுப்பேற்றுள்ளது தெரிந்ததே.

புதிய திட்டப்படி பெரிய ஆரம்ப சங்கங்களின் கீழ் கிளைச்சங்கங்களாகசிறியடிப்போக்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. இக்கடைகளில் புதிய கணக்கு முறை புகுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில்புனரமைப்பின் கீழ் முற்பணம் வைத்தவர்களின் கடன்திட்டம் நிறுத்தப்பட்டதால்அப்பணத்தை திரும்பபெறமுடியுமா அல்லது அவற்றுக்குரிய பொருள்களை வாங்கமுடியுமா என்று தெல்லிப்பளை ஆரம்ப சங்கத்தின் கீழ் இயங்கும் காங்கேசன்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

முற்பணம் வைத்து கூட்டுறவுப் புனரமைப்புக்கு முன் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் தற்சமயம் நடைமுறையில் இருக்கும் சங்கத்தின் விஷயங்களில் மாற்றம் ஏற்படாதென்றே கூறப்பட்டதாகவும் இது பற்றி அமைச்சருக்கும் கூட்டுறவு ஆணையாளருக்கும் மகஜர் அனுப்பவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

……

யாருடையது?

நல்லொழுக்க, சிறுவர் பரிபாலன உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. வே. நாகராசாவினால் மேற்படி அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள பிரதான வீதியிலிருந்து மூக்குக்கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

……

ஒத்திவைப்பு

குருநகர், செவ்

ஜூன் மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் நடக்கவிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு பொதுச் சபைக் கூட்டங்கள் ஜூன் 14-ம் 15-ம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகம்

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் ஸ்ரீ ஞானமுத்து ராமவிநாயகர் திருக்கோவில் அட்டபந்தன நூதனப் பிரதிஷ்டா மகா கும்பிஷேகம் இம்மாதம் 6-ம் திகதி நடைபெறவுள்ளது. 2-ம்திகதிபுதன்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும்.

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 p m Only
"THE PLAYERS"
காலை 10-30 பி ப 2 00
காந்தாராவ்-ராஜசுலோஜனா
நடித்த
பாட்டி சொன்ன கதை

ஹோமியோபதி

டாக்டர்களை பயிற்சிக்கு அனுப்பவேண்டும்

உடுப்பிட்டி, செவ்.

"ஹோமியோபதி டாக்டர்களை வெளிநாடுகளில்பயிற்சி பெறச் செய்யும் அரசாங்கத்தின் திட்டம்விரைவில் அமுல் நடத்தப்படவேண்டியது அவசியம்" என்று வடமராட்சி ஹோமியோபதி வைத்திய சங்கக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் கூறினார். டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

ஹோமியோ சிகிச்சை மூலம் மாற்றமுடியாத எத்தனையோ நோய்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. நோய் வியாதிகள் ஆஸ்த்மா நீரிழிவு தொண்டைசம்பந்தமான நோய்களை இவ்வைத்திய முறை மூலமே சுகப்படுத்த முடிகின்றது.

சிறந்த வைத்திய முறையை ஆதரிப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும் இலங்கையில் ஆங்கில வைத்திய முறையுடன் ஹோமியோ வைத்தியம் கற்றவர்கள். ஆயுர்வேத வைத்திய முறையுடன் கற்றவர்கள் ஏராளமானோர் இருக்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் ஊக்கமளித்து இவர்களின் திறமையை வெளிப்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ஆர் பி வீரசிங்கம் என்பவரால் 1971-ம் ஆண்டிற்குரிய ஒரு மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்,

0 0 0

பருத்தித்துறை கீரிமலை பஸ்ஸில் கூப்பன் ஒன்று திரு டி எஸ் குணரத்தினம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்,

ஏகதின லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், புதன்

நாளை பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் சனீஸ்வரபகவான் ஏகதின லட்சார்ச்சனை நடைபெறவிருக்கிறது.

சனீஸ்வர பகவானுடைய இடமாற்றத்தால் வரும் உற்பாதங்கள் கலக்கம் அமைதியின்மை இவைகள் நீங்கி நாடு நலம்பெற உலக க்ஷேமத்தை முன்னிட்டு இந்த லட்சார்ச்சனை நடைபெறவுள்ளது

திட்டம்

கோட்டை, செவ்

மாத்தறை மாவட்டத்தில் 28 கூட்டுறவுப் பண்ணைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது இத்திட்டத்துக்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இந்த வேலைத் திட்டத்தினால் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் என மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் பிரச்னை

வல்லரசுகளின் அசமந்தத்தை நீக்க இந்தியா முயற்சி

நிலைமையைநேரில்விளக்க சுவர்ண்சிங் செல்கிருர்

புதுடில்லி, ஜூன் 1

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வந்துகுவிந்துள்ள பெருந்தொகையான அகதிகளின் பிரச்னையின் தன்மையையும் அதன் முக்கியத்துவத்தையும் இந்தியாவின் கவலையையும் வல்லரசுகளுக்குச் சரியாக விளக்கும் பொருட்டு லண்டன், பாரிஸ், மொஸ்கோ நியூயோர்க் ஆகிய நகரங்களுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் நேரில் செல்லவிருக்கிருர்.

அடுத்த வாரம் புதுடில்லியிலிருந்து புறப்படவிருக்கும் அமைச்சர் சுவர்ண்சிங்கின் பிரயாண நிகழ்ச்சித்திட்டம் தயாராகிக்கொண்டிருக்கிறது.

கிழக்கு வங்காளத்திலிருந்து இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை இப்போது நாற்பது லக்ஷத்தையும் தாண்டிவிட்டதென்றும் இப்போதும் தினசரி லட்சம் பேர் இந்தியாவுக்குள் வந்துகொண்டிருப்பதாகவும் இந்தியவெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் மேலும் பல லட்சக்கணக்கானமக்கள் பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டு இந்தியாவுக்குள்வந்து கொண்டிருக்கையில் அவர்களின் பிரச்னை பற்றி வல்லரசுகள் அசமந்தமாகஇருப்பதாகவும் இதனுல் அவர்கள் பிரச்னை பற்றிய அவசரத்தையும் பிரச்னைகளின் தன்மையையும் இந்தியாவின் கவலையையும் வல்லரசுகளுக்கு உயர்மட்டத்தில் நேரில் எடுத்துவிளக்கும் பொருட்டே வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங், பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிருர்.

மற்றும் சில இந்திய அமைச்சர்கள் ஐரோப்பா மற்றும் உலக நாடுகள் சிலவற்றுக்கு நேரில்சென்று கிழக்குவங்க அகதிகள் பிரச்னை பற்றி நேரில் எடுத்துக்கூற விருக்கின்றனர்.

கடும் சண்டை நீடிக்கிறது

கிழக்குப் பாகிஸ்தானில் சில்கட், கொமிலா பகுதியில் வங்காளதேச விடுதலை முன்னணியினர் மேலும் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் கொமிலா பகுதியில் பாகிஸ்தான் பொலிஸ் காவல் நிலையத்தை அவர்கள் கைப்பற்றியதுடன் சில்கெட் பகுதியில் ஒரு பாலத்தையும் தகர்த்துள்ளனராம் பாகிஸ்தான் துருப்புக்களுக்கும் விடுதலை முன்னணியினருக்குமிடையில் கடந்த சில தினங்களாகக் கடும்சண்டை நடைபெற்றதாகவும்செய்திகள் தெரிவித்தன.

பாஷானி கண்டனம்

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஏதேதோ செய்வதாகக் கூறிக்கொள்ளும் நாடுகள் சில கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் இனக்கொலை பற்றி ஒருவார்த்தைகூடப் பேசாமலிருப்பது பெரும் ஆச்சரியம் என்று கிழக்குப் பாகிஸ்தான் அவாமிலீக் தலைவர் மௌலானு பாஷானி தெரிவித்தார்.

இப்போது மாஸ்கோவிலிருக்கும் மற்றொரு கிழக்குப்பாகிஸ்தான் தலைவரான அப்துல்சதார், கிழக்குவங்க அகதிகளைத் தங்கள் வீடுகளுக்குத் திரும்புமாறு பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் கேட்டிருப்பது விந்தை மட்டுமல்ல நிலைமை தெளிவாகிவிட்டதென்று காட்டுவதற்கு இதைவிடப் பெரிய புளுகு எதுவும் இருக்க முடியாதென்றும் சொன்ஞர்.

அகதிகள் நிர்மாணத்திட்டம்

கிழக்குவங்க அகதிகள் நிர்மாணத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுவருவதாக காந்தி சமாதான நிறுவனத் தலைவர் திரு. ஆர் ஆர் திவாகர் தெரிவித்துள்ளார். அகதிமுகாம்களிலுள்ள வலுவுள்ளவர்களே அகதிமுகாம்களைக் கவனிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது இத்திட்டங்களில் ஒன்ருகும்

புயல் நிவாரண நிதிகிடைக்கும்

இல்லாமையை ஒழிக்கும் இயக்கத்தின் தலைவரான பிரிட்டனைச் சேர்ந்த செஸ்வார் இந்தியஎல்லை ராஜ்யங்களிலுள்ள கிழக்கு வங்க அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டார். கிழக்குப் பாகிஸ்தான் புயல் நிவாரண நிதிக்கென திரட்டப்பட்ட பணத்தின் ஒரு பகுதியான பதினைந்து லட்சம் பவுண் பிரிட்டிஷ் வங்கியில் இருப்பதாகவும் இத்தொகை அகதிகள் பராமரிப்புக்காகத் திருப்பிவிடப்படுமென்றும் அவர் பின்னர் தெரிவித்தார்.

ஐ நாவில் கிளப்ப கோருவர்

கிழக்குவங்க அகதிகள் முகாம்களைப் பார்வையிட்ட பிரிட்டிஷ் பார்லிமென்ட் அங்கத்தவர்களில் ஒருவரான திரு. மைக்கல் பார்ன்ஸ் அகதிகள் பிரச்னையை ஐ நாவில் கிளப்பும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தாம்கேட்கவிருப்பதாகத் தெரிவித்தார்.

இஸ்தான் புல் பொலிஸ் அதிபர் பதவி நீக்கம்

இஸ்ரேல் தூதர் கொலையில்தொடர்பு?

இஸ்தான்புல், ஜூன், 1

துருக்கித்தலைநகரான இஸ்தான்புல்லின் பொலிஸ் அதிபர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். மற்றும் இருபொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலதினங்களுக்கு முன் இஸ்தான்புல்லில் இருந்த இஸ்ரேலியத் தூதர் பயங்கரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டார். சம்பந்தமாகநடைபெற்றவிசாரணைகளில் உயர்தர அரசாங்க அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிழக்குத்துருக்கியில் பயங்கரவாதிகளுக்கும் பொலிசாருக்குமிடையில் நடந்த மோதலில் பயங்கரவாதிகள் மூவர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர் சிறைபிடிக்கப்பட்டனர். இப்போது பயங்கரவாதிகள் சிரியாவுக்குள் ஓடி ஒளிக்கிருர்களென்று அரசாங்கஅறிக்கையொன்று கூறுகிறது.

இதற்கிடையில் ஆயுதந்தாங்கிய பயங்கரவாதிகளிருவர் இஸ்தான்புல்லில் 14 வயதுச்சிறுமியை அவரது வீட்டில் தங்கள்பொறுப்பில் வைத்துக்கொண்டுள்ளனர். அவளைவிடுவிப்பதற்காக கடந்த இரண்டுதினங்களாக அந்த வீட்டைச் சுற்றி ஆயிரக்கணக்கான பொலிசார் சூழ்ந்துநிற்கிருர்கள் மாடி ஜன்னலிலிருந்தபடியே "நான் சுகமாகஇருக்கிறேன்" என்று அந்தச் சிறுமி அடிக்கடி சத்தமிட்டாள். ஆனுல் அவள் நாற்காலியுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கவேண்டுமெனக் கருதப்பட்டது.

……

உற்சவம்

உடுப்பிட்டி, செவ்

கரணவாய் தெற்கு உச்சில் அம்பாள் கோவிலின் வருடாந்த உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 7-ம் திகதி ரதோற்சவமும் 8-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கரணவாய்தெற்கு கலட்டி துர்க்கைப் புலம் பிள்ளையார் கோவிலிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியது.

……

நியமனம்

பூநகரி, செவ்வாய்

பூநகரி அரசினர்வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக திரு. பொ. தர்மலிங்கம் சுகாதார அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பம்பாயில் டாக்ஸிகள்

பம்பாய் ஜூன் 1

பம்பாய் நகரில் நேற்று டாக்ஸிகள் ஓடவில்லை. டாக்ஸி யூனியனின் வேண்டுகோளின் பேரில் இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது. பம்பாய் நகரில் மட்டும் 14,000 டாக்ஸிகள் இருக்கின்றன'

……

சிரியா சம்மதம்

டமாஸ்கஸ் ஜூன் 1

சிரியாவில் 25 ஐக்கிய அரபுக் குடியரசு போர் விமானங்கள் இருப்பதற்கு சிரியா அரசு சம்மதமளித்திருக்கிறது.

……

சீன-போலந்து வர்த்தகம்

வார்சா, ஜூன் 1

போலந்தும் சீனுவும் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இறுதிப் பரீட்சை 23-ம் திகதி

மாவிட்டபுரம், செவ்

யாழ் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரியின்சாதாரண பிரிவு மாணவரின் இறுதிப் பரீட்சை ஜூன்மாதம் 23-ம் திகதி நிகழும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலாசாலையில் பயிற்சி பெற்ற சாதாரண பிரிவு 4 மாதப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை மேமாதம் 3-ம் திகதி நடைபெறஇருந்தது. அவசரகால நிலைமையால் ஜூன்மாதம் 3-ம் திகதி ஒத்திபோடப்பட்டது. ஆனுல் தற்போது இத்திகதியும் மாற்றப்பட்டு ஜூன் 23-ம் திகதி நிகழும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

……

பஸ் மூலம் தபால்சேவை

பூநகரி, செவ்வாய்

இதுவரைகாலமும் பூநகரி தபாற்கந்தோரில் இருந்து தபாற் சேவகர் மூலம் கொண்டுசென்று கொடுக்கப்பட்ட பல்லவராயன் கட்டு, வேரவில், கிராஞ்சி ஆகிய உபதபால் நிலையங்களின் தபால்பொதிகள் இம்மாதம்முதல் பஸ் மூலம் கொண்டுசென்று கொடுக்கப்படவுள்ளது. இதனுல் இப்பகுதி மக்கள் அதிக நன்மையடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வழக்கு ஒத்திவைப்பு

குருநகர், செவ்வாய்

மண்டைதீவு கொலை வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த சதாசிவம் சற்குணசிங்கம் என்பவரை யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் உள்ள கடை ஒன்றில்வைத்துக் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக நால்வர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோட்டில் பதில் நீதவான் திரு எஸ் கனகரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அடுத்தமாதம் 11-ம் திகதிக்கு வழக்குபின்போடப்பட்டுள்ளது.

……

நல்லைஆதீனத்தில்

திருமுறைப் பஜனை பூர்த்திவிழா

அரியாலை, செவ்

நாட்டின் நலங்கருதி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்பெற்ற திருமுறைப் பஜனைப் பூர்த்தி விழாவை யொட்டி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் யாழ் அரசாங்க உதவி அதிபர் திரு த முருகேசபிள்ளைக்குப் பிரசாதம், சளாஞ்சி வழங்கிஞர். தொடர்ந்து சேக்கிழார் திருவுருவ ஊர்வலம் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். நல்லூர்ச் சிவன்கோயில், கந்தசுவாமி கோயில் திருவீதி வலமாகச் சேக்கிழார் திருவுருவம் பவனி வந்தது. கடந்த ஒரு மண்டல காலமாகக் கோளறுபதிக, இடர்களை பதிக பாராயணம் ஆதீனத்தில் நடைபெற்று வந்தது. இலங்கையில் பயங்கரவாத இயக்கத்தினரால் அரசுக்கும், மக்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களையும், நாட்டினதும் மக்களினதும் நலன் கருதியும் இது சுவாமிகளால் நடத்தப்பட்டது.

“கோளறு பதிகத்தையும், இடர்களை பதிகத்தையும் நாம் மனத்தூய்மையுடன் நாள் நோறும் பாராயணம் செய்துவந்தால் நம் பாவங்களனைத்தும் தொலையும். துன்பங்கள் நீங்கும் அருளும் பெருகும் இன்பவாழ்வும் கிட்டும்’என தம்பிரான் சுவாமிகள் தமது உரையில் குறிப்பிட்டார்.

……

கிளிநொச்சியின்

கட்டுப்பாட்டின்கீழ் வருவதற்கு எதிர்ப்பு

பூநகரி, செவ்

பூநகரி தபாற்கந்தோரின் கட்டுப்பாட்டின்கீழ் இதுவரைகாலமாக இயங்கிவந்த நல்லூர் உபதபால் நிலையம் கிளிநொச்சி தபால்நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படவிருப்பதாக அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இம்முடிவை எதிர்த்து இ. ச. தலைவர் திரு. வை, வல்லிபுரம் தபாலமைச்சருக்கும்வடமாகாண தபால் அத்தியட்சகருக்கும், கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரிக்கும் தந்தி அனுப்பியுள்ளார்.

தரிசு நிலங்களில் ஹரிஜன மக்களுக்கு வீடமைப்புத் திட்டம்

அமைச்சரிடம் கோரிக்கை

மாவிட்டபுரம், செவ்வாய் காங்கேசன்துறை பட்டின சபையில் 3ம், 4ம் வட்டாரங்களில் 'தரிசாகக் கிடக்கும் சுமார் 1000 ஏக்கர் நிலத்தை அரசு சுவீகரித்து ஹரிஜன மக்களுக்கு வீடமைத்து கொடுக்கவேண்டும் என காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் இ. குருசாமி பீட்டர் கெனமனிடம் கேட்டுக்கொண்டார்.

காங்கேசன்துறை தொகுதி வீடமைப்புத் திட்டங்கள் குறித்து வீடமைப்பு கட்டிட நிர்மாணத்துறை அமைச்சர் திரு பீட்டர் கெனமனுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது காங்கேசன்துறை உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தமது எல்லைக்குள் அமைக்க வேண்டிய வீடமைப்புத் திட்டங்கள் பற்றி விளக்கினார்கள்.

மல்லாகம் கிராமசபை மண்டபத்தில் நடந்த இப் பேச்சுவார்த்தையில் காங்கேசன்துறை பட்டின சபைத்தலைவர் இ குருசாமி, மல்லாகம் கிராமசபைத் தலைவர் வி பொன்னம்பலம், தெல்லிப்பழை கிராம சபைத்தலைவர் எம் சிதம்பரநாதன், பண்டத்தரிப்பு கிராமசபைத்தலைவர் எஸ். கனகசபாபதி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சரிடம் சமர்ப்பித்துப் பேசுகையில் பட்டினசபையில் 6ம் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட மீனவர் குடியேற்றத் திட்டத்தில் 40 குடும்பங்கள் குடியேற விண்ணப்பித்தனர். ஆனால் 22 வீடுகள்தான் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே மேலும் 18 வீடுகளை அமைத்து உதவும்படி கேட்டுக்கொண்டார்.

தெல்லிப்பழை கிராம சபைத்தலைவர் எம். சிதம்பரநாதன் பேசுகையில்: "கீரிமலை புனிததீர்த்தத்துக்கு தினமும் ஏராளமான யாத்திரிகர்கள் வந்து போகின்றனர். இவர்கள் தங்கிப்போக முடியாதவாறு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது இதை நீக்கி யாத்திரிகர்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால் கேணிக்கு அருகில் உள்ள வீடுகளை அகற்ற வேண்டும். அத்துடன் கீரிமலைக்கு அருகில் உள்ள தரிசு நிலத்தில் இவர்களுக்கு வீடமைத்து கொடுக்கவேண்டும் என்றார்

கலட்டிக்கிராமத்தில் வசிக்கும் ஹரிஜன மக்கள் வீடில்லாது கஷ்டப்படுவதால் அவர்களுக்கு ஒரு வீடமைப்பு திட்டம் அமைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் பதில் அளிக்கையில், இது பற்றி தாம் நடவடிக்கை எடுத்து வீடமைப்புக்கான வேலைகளைச் செய்வதாகக் கூறினார்.

இன்றைய பலன்

வைகாசி மாதம் 19-ந் திகதி

2-6-71

மேஷம்- பூமியால் இலாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும். பெரியோர்கள் ஆதரவும் உண்டு.

ரிஷபம்- வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழிற்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

மிதுனம்- வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்தாளர்களுக்குப் புகழ் குவியும். இன்று சிறப்பான நாள்.

கடகம்- எவ்விடயத்திலும் நன்கு ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும். ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும்.

சிம்மம்- மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கும். இதன் மூலம் கைகலப்பும் ஏற்படலாம். பொறுமை நன்று.

கன்னி- பெரியஇடத்து சிநேகிதம் இன்று ஏற்படலாம் இலகுக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

துலாம்- குடும்பக் கவலை தலைதூக்கும். பிதாவழி பிணிக்கும் இடமுண்டு. அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றிமறையும்.

விருச்சிகம்- வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம். ஆசிரியர் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள். பொதுத்துறையிலும் நாட்டம் ஏற்படும்.

தனுசு- மக்களால் மகிழ்ச்சி மனம்நிறைந்த வாழ்வு புதுமையில் நாட்டம் புதுப்பொலிவும்உண்டு. வெளியிடத்துப் பயணம் ஒன்று இன்று மேற்கொள்ளப்படலாம்,

மகரம்- தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரி விடக்கூடும் இலகுக்கு அன்னியவாசம் ஏற்படலாம்.

கும்பம்- இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும் காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும்,

மீனம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

மின்சார விநியோகம்

குருநகர். செவ். தீவுப்பகுதிக்கான மின்சார இணைப்பு வேலைகள் ஊர்காவற்றுறை வரை முடிவடைந்துள்ளது 1971-ம் ஆண்டு புங்குடுதீவு வரை முடிவடையும் திட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்த மின்சார இணைப்பு வேலைகள் தற்பொழுது ஊர்காவற்றுறை வரை மட்டும் நடைபெற்றுள்ளது. ஊர்காவற்றுறை மின்சார விநியோக வேலைகள் ஊர்காவற்றுறை பட்டினசபை பொறுப்பேற்றுள்ளது.

நெல்லியடி வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய் நெல்லியடிப் பட்டினசபைக் கோஷ்டியினருக்கும் வதிரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற கைப்பந்தாட்ட மோதலில் நெல்லியடிப் பட்டினசபைக் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

வைத்தியசாலை வீதி

சிரமதானமூலம் திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், புதன் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலையின் வாட்டுக்களை இணைக்கும் வீதிகள் சிரமதான மூலம் திருத்தப்பட்டுள்ளன.

யூனியன் கல்லூரி சாரணப் பயிற்சியாசிரியர் திரு. ஆர். வில்வநாதன் தெல்லிப்பழைக் கிராமஅபிவிருத்திச் சங்க தலைவர் திரு. கே. வேலாயுதம் ஆகியோரது தலைமையில் மேற்படி சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியைச் சேர்ந்த பலரும், மேற்படி கல்லூரிசாரணரும் இச்சிரமதான வேலையில் ஈடுபட்டனர். ஓய்வு பெற்றஓவசியர் திரு. எம். குணரத்தினம் இச்சிரமதான வேலைக்குத் தேவையான வாகன உதவியையளித்தார்.

தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்திய சாலைத் தலைவரும் தனாதிகாரியும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகவே மேற்படி வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தடுப்புக்காவலில் 12,000 பேர்

கோட்டை, செவ் பன்னிரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதால், புனரமைப்புதிட்டத்தை மாற்றியமைக்கவேண்டி ஏற்பட்டதாக அரசாங்கம் நேற்றுத் தெரிவித்தது.

கைதிகள் ஒரே இடத்தில் குவிந்திருப்பதால் அவர்களை பல்வேறு இடங்களில் அமைக்கப்படும் புனரமைப்பு நிலையங்களுக்கு, குழுக்கள் குழுக்களாக அனுப்பி வைக்கப்படுவர் என்றும் விவசாயம் கட்டிடம் போன்ற துறைகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது தவறான வழியில் இட்டுச்செல்லப்பட்ட இளைஞர்களை சட்டத்துக்கு பணிந்துநடக்கும் சமுதாயமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

தஞ்சைக் கோயிலில் கல்வெட்டுகள்

சென்னை, ஜூன் 1 பாரத ஆராய்ச்சிக் குழுவினால் தஞ்சாவூர்க்கோவிலில் மூன்று கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டன.

இவை சோழ மராட்டிய காலத்துக்குப் பின்னரான கல்வெட்டுக்களாயிருக்க வேண்டுமென தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்கள் மிகத் தெளிவாக உள்ளதாகவும் தஞ்சாவூர்க் கோவிலை அடுத்து மண்டபம் நிர்மாணிக்க அத்திபாரம் வெட்டிய போது மேற்படி கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

சைவ மக்கள்

'பெரிய புராணத்தைப் பூஜை அறையில்வைத்துப்போற்றுக'

அரியாலை. செவ்வாய் "சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாக விளங்குகிறது. இதில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகள் விளக்கப்பட்டுள்ளன. திருமுறைகளையும், கல்வெட்டுக்களையும் சான்றுகளாகக்கொண்டு சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தைச் செய்துள்ளார்" என்று நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற சேக்கிழார் குருபூஜை விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

"பெரியபுராணம் தமிழில் எழுந்த தனிப்பெருங்காப்பியம். நம்பியாரூரரை இதன் காப்பியத்தலைவராகக் கொண்டு ஏனைய நாயன்மார்களின் வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது இந்நூல் பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடப்பட்டது" என்று அவர் கூறினார்.

தமிழ்மொழியில் திருமுறைகள், திருப்புகழ் மற்றும் அருட்பாக்கள் இருப்பது போன்று வேறெந்தமொழியிலும் இல்லை" என்று விழாவில் உரையாற்றிய பண்டிதர் செ. சிவப்பிரகாசம் கூறினார்.

சேக்கிழார் பெருமான் பாடிய பெரியபுராணத்தைச் சைவமக்கள் போற்றித் தமது பூஜை அறையில் வைத்து நாளொரு பாடலாகவேனும் பாராயணம் செய்யவேண்டுமென்று தம்பிரான் சுவாமிகள் கேட்டுக்கொண்டார்.

செல்வி குணபூஷணி நாகலிங்கத்தின் திருமுறைக் கச்சேரியும் நடைபெற்றது. கொக்குவில் திரு. மார்க்கண்டு குழுவினர் புராண படனம் செய்தனர்.

இடமாற்றம்

சுழிபுரம், செவ்வாய் பண்டத்தரிப்புப் பட்டின சபைப் பகுதிப்பொது மருத்துவ தாதியாக பணியாற்றிய செல்விஎஸ். பரமேஸ்வரி இம் மாதம் தொடக்கம் வரணி அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உற்சவம்

உடுப்பிட்டி, செவ்வாய் வதிரி அர்ச் அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 4ம் திகதி ஆரம்பமாகி 13ம் திகதி முடிவடையும்.

0 0

தாவடி. செவ். தாவடி அம்பலவாண வேதவிநாயகராலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 7-ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 9-ம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

வானொலி நேரத்தில் மாற்றம்

கோட்டை, செவ். இன்று முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பு ஆரம்பமாகும் நேரத்தில் மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது.

சிங்கள தேசிய சேவை காலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தமிழ், ஆங்கில தேசிய சேவை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சிங்கள, தமிழ் செய்தி அறிக்கை காலை 6-30 மணிக்கும் ஆங்கிலச் செய்தி 6-40க்கும் ஒலிபரப்பாகும். நண்பகல், இரவுச் செய்தி அறிக்கை நேரத்தில் மாற்றஞ்செய்யப்படவில்லை.

புதிய அரிசி பங்கீட்டுப் புத்தகம்

கோட்டை, செவ்வாய் 26 வது அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்துக்கான குடியிருப்பாளர் கணக்கெடுப்பு கொழும்பில் முடிவடைந்துள்ளது. இதுவரை குடியிருப்பாளர் பட்டியலை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்காதவர்கள் கொழும்பு உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியிடம் உடனடியாக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பாளர் அட்டவணைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் ஜூன் மாதம் 5ம் திகதிக்கும் 10ம் திகதிக்குமிடையில் வீட்டு வாடகைப் பற்றுச்சீட்டையோ அல்லது மின்சாரக் கட்டணப்பற்றுச் சீட்டையோ நேரில் காட்டி பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

……

கிரக சாந்தி

சுழிபுரம், செவ். பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் இம்மாதம் 3-ம் திகதி சனீஸ்வர கிரகதோஷ நிவாரண சாந்தியும்ஹோமமும் நடைபெறவிருக்கிறது

அறிவித்தல்

சீமேந்து விநியோகம்

1-6-71 தொடக்கம், 25 பைகளுக்கு மேற் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பப்படிவம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் ரூபா 1/-க்குக் கிடைக்கும் ஒரு பை சீமேந்தின் தற்போதைய தொழிற்சாலை விலை ரூபா 10/50

25 பைகள் வரை தேவைப்படுவோர், பிரிவுக் காரியாதிகாரியின் (D. R. O) சிபாரிசுடன் அண்மையிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் தங்கள் தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
30-5-1971.

2-வது கட்ட அலுவலகம்

கேள்விப்பத்திரம் நிரப்பப்படவில்லை; ஒப்பந்தத்தில் சாட்சிகள் இல்லை

1 மணி நேரத்தில் 20 தீர்மானங்கள்

(சபை நிருபர் 'யோகி')

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மாநகரசபையின் 2வது கட்ட புதிய அலுவலக கட்டட கேள்விப்பத்திரம் நிரப்பப்படாமல் கையெழுத்துடன் இருப்பதாக கூறிய மேயர், அப்பத்திரத்தை நேற்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் காட்டினார். கேள்விப் பத்திரத்திலும் ஒப்பந்தபடிவத்திலும், சாட்சிகள் கையொப்பமிடவில்லையென்று தெரிவித்த மேயர் கேள்வி சரியானதல்ல என்பதுடன் சட்டவிரோதமானதாகும் எனக் கூறினார்.

யாழ் மாநகரசபை பொதுக்கூட்டம் நேற்றுக் காலை மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் ஆரம்பமானது.

2வது கட்ட புதிய அலுவலக கட்டட கேள்விப்பத்திரம் பற்றி மேயர் மேலும் கூறியதாவது: கேள்விப்பத்திரம் இப்பொழுதுதான் கைக்கு வந்திருக்கிறது யாரும் அதனைப் பார்க்கலாம். பத்திரத்தில் கையெழுத்துமட்டுமே இருக்கிறது சட்டத்தின்படி அதை ஏற்கமுடியாது. இது சட்டத்துக்குப் பிழையானபடியால் கட்டட வேலைகளை நிறுத்துகிறோம், இப்பதான் கட்டட ஆரம்ப வேலைகள் நடைபெறுகிறது இன்னும் நாள் சென்றால் பணம் அதிகம் செலவாகிவிடும்

திரு என் ரி செல்லத்துரை: பொறுப்பாக இருந்தவர்கள் அப்படியான பத்திரத்தை ஏற்றிருந்தால் அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்,

திரு எஸ் நாகராசா: கமிஷனர் மராமத்து என்ஜினியருடன் ஆலோசித்து அந்தக் கேள்விப்பத்திரம் முறைக்கு [illegible]யென்று கூறியிருக்கிறார். அதனை நிராகரிக்க சபைக்கு அதிகாரமில்லை

திருமதி அந்தோனியா சுவாமிநாதர்: இந்தக்கட்டட விஷயம் வந்தபோது குழப்பமான சூழ்நிலை இருந்தது இதற்குப் பெரும்பாலான உறுப்பினர்களின் எதிர்ப்பு இருந்தது. இதன் மத்தியில் தான் இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது இதனை எதிர்த்தவர்களில் நானும் ஒருவர் நகரில் 23 வட்டாரங்களில் எவ்வளவோ வேலைகள் இருக்கும்போது ஒவ்வொரு வருடமும் அலுவலகம் கட்டுவது சரியானதா? இதனால்தான் எதிர்த்துவாக்களித்தேன் இந்தக்கட்டடம் கட்டக்கூடாது என பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்பியபோது மாஜிமேயரினால் இதன்ஒப்பந்தம் செய்யப்பட்டது நிதிக்குழுவின் ஆலோசனையை சபை ஏற்கலாம்; நிராகரிக்கலாம் இப்பொழுது பிழைகளை நிவர்த்திசெய்யவேண்டும். இந்தச் சபை உறுப்பினர்கள் நிதிக்குழுவிற்கு இடைஞ்சலின்றி நடக்கவேண்டும் ஒப்பந்தகாரரும் வேலைசெய்திருக்கிறார். பெரும் இடத்தில் பிழைகள் நடந்திருந்தால் அதை திருத்தவேண்டும்.

திரு கே எஸ் நடராசா: இக்கட்டடம் பற்றி இரண்டாவது கட்டத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை முதலாவது அலுவலக கட்டடம் பலவிதத்திலும் கூடாதநிலையில் கட்டப்பட்டது கதவு ஜன்னல்கள் பலப்பில்லாமலிருக்கிறது சுவர்களில் வெடிப்புஏற்பட்டிருக்கிறது

திரு எஸ் சிவசுப்பிரமணியம் மாநகரசபையில் பணம் வறண்டு கொண்டுபோகும் நிலையில் புதிய கட்டடம் தேவைதானா? ஏற்கனவே புதிதாக ஒரு கட்டடம் இருக்கும்போது மற்றக்கட்டடம் ஏன்?

திரு எஸ் நாகராசா: எத்தனையோ மேயர்கள் இந்தக் கதிரையில் இருந்திருக்கிறார்கள் இனிமேலும் இருக்கப் போகிறார்கள் நாங்கள் குழந்தைகளல்ல, எங்களுக்கும் எல்லாம் தெரியும்.

2வது கட்டட அலுவலக கேள்விப்பத்திரத்தை நிராகரிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

நீச்சல் தடாகம்

திரு என் ரி செல்லத்துரை கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. யாழ் மாநகர எல்லைக்குள் ஓர் நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டும் என முன்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. ஆகவே இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுடன் முதல்வர் தொடர்பு கொண்டு நவீன நீச்சல் தடாகம் ஒன்றை அமைக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும்

தமிழில் தீர்மானம்

இச்சபையில் ஆங்கிலம் தெரியாதவர்களும் இருப்பதால் ஆங்கிலத்தில் உள்ள தீர்மானங்களை விளங்கிக்கொள்ள முடியாமலிருக்கிறதென்று திரு என் ரி செல்லத்துரை கூறினார்

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஆங்கிலத்தில் உள்ள தீர்மானங்களை தமிழில் கூறவேண்டும்

திரு செல்லத்துரை: நிகழ்ச்சிநிரலிலும் ஆங்கிலத் தீர்மானம் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டும்

மேயர்: இனிமேல் தமிழிலும் இடம்பெறும்

ஜனாப் எம் ஜி பஸீர் கொண்டுவந்த கீழ்காணும் தீர்மானம் நிறைவேறியது தற்போது பாடசாலை மருத்துவ அதிகாரியின் உத்தியோக அலுவலகம் இருக்கும் இடம் பொதுமக்களுக்கு மிகவும் இடைஞ்சலாகவும் போக்குவரத்துக்கு கஷ்டமாகவும் இருப்பதால் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றும்படி சுகாதார மந்திரியை கேட்டுக்கொள்வது

நோயாளிகள் கஷ்டம்

திரு என் மார்க்கண்டு கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நிலவும் இடநெருக்கடி காரணமாக நோயாளிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இதைக்கவனியாது விட்டால் மேலும் மேலும் இடநெருக்கடியால் நோயாளிகள் மிகவும் அவதிப்பட வேண்டிவரும். இதை சுலபமாக நீக்குவதற்கு ஒரே வழிதான் உண்டு தற்போது தெல்லிப்பழையில் திறக்க இருக்கும் புதிய அரசாங்க வைத்தியசாலையில் தரம் உயர்ந்த வைத்திய நிபுணர்களை நியமித்து வடமாகாணத்திலுள்ள நோயாளர்களின் கஷ்டங்களை நீக்க ஆவன செய்யும்படி சுகாதார அமைச்சரை கேட்டுக் கொள்ளவேன்ள வேண்டும்.

திரு. எஸ். ஜெ. அன்ரனியின் கீழ்காணும் தீர்மானம் நிறைவேறியது:

"இந்நாட்டில் ஜனநாயகத்துக்கு எதிராக பயங்கர வாதிகளால் உருவாக்கப்பட்ட குழப்பங்களை அடக்கி நாட்டில்அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டு வதில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் தவறான பாதைகளில் வழிநடத்தப்பட்டு குழப்பங்களில் ஈடுபட்ட வாலிபர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கத்தக்க திட்டங்களை வகுக்க ஏற்பாடுகளைச் செய்ததற்கும் அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன் அரசாங்கம் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்ட மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும்தனதுபூரண ஆதரவைத்தெரிவிப்பதெனவும் இம் மாநகராட்சி மன்றம் தீர்மானிக்கின்றது"

திரு. போல்ராஜ் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறியது:

"இரண்டாவது கட்ட புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தைமராத்துப் பகுதிவேலைகளுக்கென ஒதுக்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது."

'பாஷையூர் துறைமுகத்தின் அணைக்கட்டுகள் எல்லாம் பழுதடைந்திருப்பதால் அதைத் திருத்தித் தரும்படி மீன்பிடி அமைச்சரையும் மீன்பிடி இலாகாவையும் கோருவதென இச்சபை தீர்மானிக்கிறது."

ஜனாப் எம். ஜி. பஸீரின் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேறியது.

"விசைக்கியருக்காக பிரத்தியேகமாக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பணத்தை மின்சார விஸ்தரிப்புகளுக்கு செலவிட வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கின்றது."

"போயா நாட்களிலும் லீவு நாட்களிலும் மக்கள் தங்களது தேவையான சகலபொருட்களையும் வாங்குவதற்கு ஏற்றபடி மக்கள் "சந்தை" உண்டாக்குவதற்கு உடனடியாக முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மந்திரியிடம் அனுமதியை விரைவில்பெற வேண்டும் என்றும் இச்சபை தீர்மானிக்கின்றது."

திரு. கே. வி. தெய்வேந்திரன் கொண்டுவந்த கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேறின.

"யாழ் மாநகரசபை எல்லைக்குள் எடுக்கும் மலங்களை லொறி மூலம் ஏற்றிச் செல்ல ஏற்றுமிடம் எனது வட்டாரத்தில் அருகில் உள்ள 1-ம் வட்டாரத்தில் தற்சமயம் உள்ளது. இதே இடத்தில் முன்னர் நடைபெற்றது எனது எதிர்ப்பின் பேரில் மக்களுக்கு நன்மை விளைவிக்கும் வகையில் இவ்விடம் மாற்றப்பட்டது இப்போது மீண்டும் அதே இடத்தில் அவ்வேலை நடைபெறுகிறது. 1-ம் வட்டாரத்தில் வாழும் மக்களின் சுகாதாரத்தை முன்னிட்டு இதனை உடனடியாக மாற்ற முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது முன்னர் கடற்கரை வீதியில் சிறைச்சாலைக்கு அருகில் இவ்வேலை நடைபெற்றது இங்கு இதனை மறுபடியும் மாற்ற வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது."

கடற்கரைவீதியில் வாழும் மக்கள் குடி தண்ணீரின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே மீனாட்சி அம்மன் கோவில் வீதியில் அக்கோவிலுக்கு அண்மையில்போடப்பட்ட தண்ணீர்க்குழாயை மீண்டும் விஸ்தரித்து தொடர்ந்து கடற்கரை வீதி ஓரமாக எடுத்துச்சென்று வில்லூண்டி மயானத்திற்கு அருகில்இருக்கும் தண்ணீர்க்குழாயுடன் இணைக்க ஆவன செய்ய வேண்டுமெனவும், இப்பகுதிவாழ் மக்களின் கஷ்டத்தைப்போக்க வேண்டும் எனவும் இச்சபை தீர்மானிக்கிறது

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கொண்டுவந்த 7 தீர்மானங்கள் நிறைவேறின தீர்மானங்கள்நிறைவேறுகின்றனவேயொழிய நடக்குமா? தெரியவில்லை என திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கூறியபோது நடக்கும் என மேயர் கூறினார் சபையில் ஒரு மணி நேரத்தில் 20 தீர்மானங்கள் நிறைவேறின

சித்த ஆயுள் வேதத்துக்கு சமஸ்கிருதம் அவசியமா?

(டாக்டர் இ. பி, இராசையா ஆர். ஏ; எம்; பி., ஜே. பி.)

சித்த ஆயுள் வேதம் பயிலும் மாணவர்களுக்குச் சமஸ்கிருத மொழி கட்டாயமாகப் போதிக்கவேண்டுமா அல்லவா என்பதனை விசாரணை செய்யும் "நவக மூவர் குழு" இவ்விடயத்தில் அக்கறைகொண்டவர்களிடமிருந்தும் அபிப்பிராயங்களைப் பெற விரும்பிப் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு காங்கேசன்துறையில் அறிவிற் சிறந்தவர்கள் அடங்கிய இவ்விசாரணைக் குழுமுன் சாட்சியமளிக்கும் கௌரவத்தை எனக்குத் தந்திருந்தார்கள். எனது அபிப்பிராயங்களுக்குச் சார்பாக மேலும் சில ஆதாரங்களை இச்சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

தமிழில் ஆயுள்வேதப் பயிற்சி

பரத கண்டத்திலே சித்த மருத்துவமானது அகஸ்தியர், தேரையா, திருமூலர், புலஸ்தியர் முதலாய சித்த புருடர்களால் ஆக்கப்பட்டுள்ளதையும் அது வரலாற்றுக்கால வரம்புக்கு அப்பாலும், இப்பாலும் அமைப்பெற்றுள்ளதென்பதையும் அறிஞர் மறுதலிக்கமாட்டார்கள். அச்சித்தர்களினால் கூறப்பட்ட மருத்துவ நூல்கள் செய்யுள் உருவில் உயர்ந்த தமிழ்நடையில் இருப்பதைக் காணலாம் தமிழ் மொழியில் சிறந்த புலமையின்றி அச்செய்யுள்களில் மறைந்துகிடக்கும் உண்மைகளைக் கிரகிக்கவோ வெளிப்படுத்தவோ முடியாது. ஆகவே சித்த ஆயுள் வேத மருத்துவப் பயிற்சிக்கு உயர்தரத் தமிழ்ப் பயிற்சி மிகமிக உதவியாக அமையும் என்றால் யாவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கார். இதைவிட்டுச் சமஸ்கிருத மொழியைப் போதிக்கும் பிரச்சனையை ஏற்படுத்தி நாம் விவாதிப்பது வருந்தப் படவேண்டியதாயுளது.

தமிழ்மொழியில் உருவாகியது சித்த வைத்தியம்

1969ம் ஆண்டு சென்னை நகரில் நடந்தேறிய "உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு" மருத்துவப் பகுதி வெளியீட்டில் குறிப்பிட்டவை இங்கு அவதானிக்க வேண்டியவையாகும்:-

"சித்த வைத்தியம் தமிழ் வைத்தியமாகும், தொன்மையுள் தொன்மையான இந்தியப் பெருநாட்டில் அண்மைக் காலம் வரை வெகுவாக வழங்கிவந்த இம் மருத்துவ முறையைத் தமிழ் நாட்டுப் பண்டைச் சித்தர்கள் தமிழ் மொழியில் உருவாக்கித் தந்துள்ளனர்"

மேலும் இந்தியாவில் எந்த மொழியில் ஆயுள் வேத மருத்துவம் போதிக்கப்பட வேண்டுமென்பதை ஆராய்ந்தபொழுது பெருமை வாய்ந்த பிரசித்திபெற்ற டாக்டர் அசுடோஸ் ராய் (L. M. S.) "ஆயுள்வேத சஞ்சிகை" என்னும் பிரசுரத்தில் —"பல்வேறு பகுதிகளிலும் நடந்துவரும் பல்வேறு ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிகளிலும் அவ்வப் பிராந்திய மொழிகளிலேயே போதிப்பதைப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பண்டைக்காலத்தில் இந்தியரின் அறிவு வளர்ச்சிக்குச் சமஸ்கிருத மொழி பொது மொழியாகவிருந்தது உண்மையே ஆயுள் வேத நூலகணம் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டன. ஆனால் இன்று (வழக்கற்ற) அம்மொழியினை அந்நிய மொழியினைப் போன்றே பயிலவேண்டியுளது. வழக்கற்ற இம்மொழிப்பயிற்சிக்கு ஒரு மாணக்கன் பல வருடங்களைச் செலவழிக்கிறான். சாதாரண மாணாக்கனுடைய மூளைத்திறன் இதனால் விரயமாக்கப்படுகிறது. ஆகவே சாதாரணமாகத் தொழில்புரியப் பயிலுபவர்க்கல்ல, ஆராய்ச்சி, புலமைப் பயிற்சிகளில் ஈடுபடுபவர்களுக்குச் சமஸ்கிருதமொழி ஓரளவுக்கு வேண்டப்படலாம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும் இங்கு அவதானிக்கத்தகுந்தது.

தேவையற்ற திணிப்பு

சுதேச வைத்தியம் சம்பந்தமாக ஆராய்ந்த புகழ்பெற்ற "சொப்ராக்குழு" (Chopra Committe)வினது அறிக்கையிலிருந்து இவ்விஷயத் தொடர்பான சிபார்சுகளை இங்கு அவதானிப்பது

(6-ம் பக்கம் பார்க்க)

கல்விச் செலவை குறைப்பதெப்படி?

கல்வி சம்பந்தமான பழைய மரபுகள், தற்போது கல்வித்துறையில் அனுசரிக்கப்பட்டுவரும் ஒருமுனைப்பான முறைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும், நாட்டுக்கும் பயனளிக்கத்தக்கவகையில் கல்விமுறை ஒன்றை உருவாக்குவதென்பது இயலாதகாரியமாகும் இவ்வாறு உருவாக்கினால் நஷ்டமே தொடர்ந்து ஏற்படும். ஆகவே கல்விக்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாவையும் நன்கு பயன்படுத்தச் சிக்கனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வீண் செலவையும் ஒருமுக முனைப்பான உபயோகத்தையும் குறைப்பது அத்தியாவசியமானதாகும். இதில் காலதாமதமின்றிக் கவனம் செலுத்தப்படவேண்டும் இதைப் பின்வருவனவற்றை அனுசரித்து மேற்கொள்ளலாம்:

■ சில வசதிகளைச் சில பாடசாலைகள் பொதுவானவையாக பகிர்ந்து கொள்ளலாம் உதாரணமாக நடமாடும் நூல்நிலையத்தை ஒழுங்குசெய்து கிரமப்புறப் பாடசாலைகளுக்கு உதவியளித்து ஊக்கமளிக்கலாம் இதைப் பெருமளவில் மேற்கொள்ளுதல் நன்மைபயக்கும்.

■ எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் கல்வி நிறுவனங்கள் பகலில் நீண்ட நேரம் உபயோகப்படுத்தப்படவேண்டும். தேவையெனில் இரவிலும் உபயோகப்படுத்தப்படலாம்.

■ இன்னும் சில வருடங்களுக்கு மட்டற்ற மாணவர்களைக்கொண்ட வகுப்புகளும் மாணவர் ஆசிரியர் விகிதாசார உயர்வும் தவிர்க்கமுடியாதனவாகும். இவற்றைப் போக்க செல்வச் செழிப்புள்ள நாடுகளின் நடைமுறைகளைப் நாம் பின்பற்றினால் அவை கல்விக்கு இழைக்கும் பெருந் தீங்காகும்: அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டில், வாழ்க்கையில் ஏற்படும் குறைபாடுகளைக் கொண்டு பொருத்தமான கல்வி பயிற்றும் முறைகளைப் பயன்படுத்தி கடின உழைப்பு மூலம் இவற்றைச் சமாளிக்க வேண்டும்

■ கல்வித்துறையில் தற்போது ஏற்படும் வீண்விரயத்தைத் தொடர்ந்தும் அனுமதித்துக் கொண்டிருப்பதற்கு எந்தவிதமான நியாயமுமில்லை. அந்தநஷ்டத்தைக் குறைப்பது நாட்டின் குறிக்கோளாகவிருக்க வேண்டும் இதற்காக வகுக்கப்படும் திட்டங்கள் நல்லவகையில் செயல்பட தனிப்பட்ட ஒவ்வொருவரும் கல்வி நிறுவனங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் நிலைமையைச் சமாளிக்க இதுவே ஒருவழியாகும்

வேலைநேரம் அதிகரிக்கப்படுவதோடு வேலைநாட்களும் அதிகரிக்கப்படவேண்டும் விடுதலைநாட்களைக் கூடியளவு நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் முதலாவது பருவம் 2-வது பருவம் என்பதுபோல் 'விடுதலைப்பருவம்' எனக் குறித்துச் செயல்படவேண்டும்.

■ கல்வி பெற விரும்பும் தொழிலாளருக்கும் முழுநேரக் கல்வியளிக்கும் நிறுவனங்களில் கல்வி பெற வாய்ப்பளிப்பது, கல்வி பெறவிரும்புபவர்களுக்கு அரைநேரக் கல்வியோ அல்லது சுயமாகத் தான் விரும்பிய நேரத்தில் கல்விபெறத்தக்க வசதியோ பெருமளவில் திட்டமிட்டுச் செயற்படுத்தவேண்டும்

■ கல்வி பெறும் பிள்ளைகளில் மிகத்திறமைவாய்ந்தவர்களுக்கு முதலிடம் அளித்து அவர்களின் கல்வியில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்

■ சிரேஷ்டஉயர்தரபாடசாலைகளில் சிறந்ததரமான சிலவற்றைத் தேர்ந்தெடுத்து மேற்படி திட்டங்களை துரிதமாகச் செயல்படுத்தி அவை மற்றவைக்கு முன்மாதிரியாக அமையத் தொழிற்படுத்த வேண்டும்.

■ நாட்டின் மனித சக்தியின்தேவைக்கேற்பசிரேஷ்ட உயர்தர கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் இம்மாணவர்கள் தெரிவில் நியாயம் நேர்மை கடைப்பிடிக்கப்படவேண்டும்

■ மிகச் சிறந்த அளவு வசதியான சிக்கனமான கல்வி நிறுவனங்களை கல்வியின் எல்லா நிலையிலும் அமைப்பதற்கு அதிக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அப்பொழுதுதான் அங்கு திறமையும் சிக்கனமும் சிறந்துவிளங்கும்

(கொராறி அறிக்கையிலிருந்து)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] [illegible] வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பீகாரில் புதிய மந்திரிசபை அமையும்

பாட்னா, ஜூன், 1

பீகாரில் புதிய மந்திரிசபையை அமைக்குமாறு முற்போக்கு விதாயக்தளின் தலைவர் திரு . லாபாசன் சாஸ்திரியை பீகார் கவர்னர் கேட்டுள்ளார்.

பீகார் முதன்மந்திரி சேர் கத்தூரி சாக்கின் ராஜினாமாவைத் தொடர்ந்தே மேற்படி மந்திரிசபையை அமைக்கும்படி கவர்னர் கூறினார்.

இன்று காலை பட்ஜட் கூட்டத்தின்போது முதன்மந்திரி ராஜினாமாச் செய்யுமுன்னர் பத்து மந்திரிகள் வெளிநடப்புச் செய்தனர். சேர் கத்தூரிசாக்கின் சம்யுக்த விதாயக்கட்சியின் பலம் சிறுபான்மையாக குறைந்ததனால் மந்திரிசபையைக் கலைத்துவிடும் நோக்கமாக சேர் கத்தூரிசாக் ராஜினாமாச் செய்தார். இது எட்டாவது கலப்பு மந்திரிசபையாகும்.

ஜோர்டான் குற்றச்சாட்டு

அம்மான் ஜூன் 1

பாலஸ்தீன விடுதலை இயக்க முன்னணிமீது ஜோர்டான் அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. ஹுசெயின் மன்னரை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கு இந்த முன்னணி முயற்சி செய்வதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சித்த ஆயுள் வேதத்துக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமாகும்''...பிராந்திய மொழிகளில் அல்லது இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்படாது சமஸ்கிருத மொழியிலேயே (மருத்துவ) பாட நூல்கள் இருத்தல் வேண்டுமெனும் அபிப்பிராயத்தையும் வெளியிட்டுள்ளார்கள் அவ்வபிப்பிராயம் அடியோடு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பது எங்கள் தீர்ப்பு. சமஸ்கிருத மொழியில் உள்ள பாடப்புத்தகங்களைத் திணிப்பதால் மாணாக்கர்களுக்கு ஒரு தேவையான பாஷையைப் பயில வேண்டிய தாங்கமுடியாத நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது

ஏகமனதான முடிவு

மாணவர்கள் பிராந்தியங்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பிராந்திய மொழிகளைப் பயின்றும். தேசிய தேவைகளுக்கு இந்தி மொழியைப் பயின்றும் கலை,விஞ்ஞானங்களின் முன்னேற்றங்களை அவ்வப்போதே அறிய ஆங்கில மொழி பயின்றும் வெளிவருகிறார்களென எதிர்பார்க்கிறோம். ஆயுள்வேத மருத்துவத்தொழில் புரியக் கற்கும் சாதாரண மாணாக்கனுக்குத் தினசரி வாழ்விலும் உலகத்தினைத் தெரியப்படுத்தும் கலை, விஞ்ஞான முன்னேற்றங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பற்றதுமான (வழக்கற்ற) நான்காவது மொழி ஒன்றினைச் [சமஸ்கிருதத்தை] திணிப்பது அறவே தேவையற்றதாகும் பிராந்திய மொழிகளிலேயே மருத்துவம் போதிக்கவேண்டுமென நாம் தீர ஆராய்ந்தெடுத்த முடிவாகும்' நேரடிச் சாட்சியம், எழுத்து மூலச் சாட்சியங்களிலிருந்து நாம் எடுத்த இம்முடிவு ஏகமனதானதாகும்.

இலங்கையின் அரசினர் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் ஆரம்ப 20—25 வருடங்களாக ஆயுள்வேத மாணாக்கர்களுக்குச் சமஸ்கிருத மொழியிலும், யுனானி மாணாக்கர்களுக்கு உருது மொழியிலும், சித்த மாணவர்களுக்கு உயர் தமிழ் மொழியிலும் பயிற்சி கொடுபட்டதாகவும் தெரிய வருகிறது. அவ்வொழுங்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதும் போற்றக்கூடியதுமாகும்.

ஆயுள்வேத மகாமண்டலம் தீர்மானம்

மதுரையில் 4-1-70 அன்று கூடிய தமிழ் ஆயுள்வேத மகாமண்டலம் தனது 26வது மகாநாட்டிலே பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது!

''பாளையங்கோட்டையில் உள்ள சுதேச வைத்தியக் கல்லூரியில் ஆயுள்வேத வைத்தியப் பிரிவிலே சேரப் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லாதிருப்பதையிட்டு இம்மாநாடு மிகுந்த கவனஞ் செலுத்துகின்றது. தமிழில் சித்த வைத்தியத்துக்குப் பயிற்சியளிப்பது போல ஆயுள்வேத வைத்தியப் பயிற்சியையும் நடாத்தப் பாடத்திட்டத்தில் ஆவன செய்யும்வண்ணம் தமிழ்நாடு அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளுகின்றது.

ஆகவே, இந்தியாவிலே பொதுவாகவும், சித்தவைத்தியத்திற்குப் பிறப்பிடமான தமிழ்நாட்டிலே சிறப்பாகவும் சமஸ்கிருத மொழி ஓர் இறந்த மொழியாகக் கருதிப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சித்தவைத்திய மாணவர்களுக்கு ஒரு கட்டாய பாடமாகச் சமஸ்கிருதத்தை ஆக்குவது எவ்வாறு பொருந்தும்?

ஆகவே புலமைப் பயிற்சி மாணாக்கர்களை மட்டுமன்றிச் சராசரி சித்த மருத்துவ மாணாக்கர்களினதும், பெரும் பகுதியினரான சித்த மருத்துவர்களினதும் நலன்களையும் மனதிற்கொண்டு அறிவுமிக்க 'நவமுவ குழு' இவ்விஷயத்தில் ஒரு சமுகமான முடிவினை ஏற்படுத்திக் கொள்ளுமென தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சித்த வைத்தியம்

'தாய்மொழிமூலமே போதனை அளிக்கவும்'

கிராமசபை தீர்மானம்

சுழிபுரம், செவ்வாய்

'தமிழ்மொழியில் போதிய சித்தவைத்தியநூல்கள்இருக்கையில் சித்தவைத்தியம்கற்கும் தமிழ் மாணவர்கள் மேல் சமஸ்கிருதத்தைத்திணிப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்தயோசனையை உடன் கைவிடமாறு வேண்டுகிறோம். தாய்மொழி மூலம் மட்டுமே கற்பிக்க வேண்டும்'

இவ்வாறு கோரும் தீர்மானமொன்றைசுழிபுரம் கிராமச்சபை ஏகமனதாகநிறைவேற்றி சித்த வைத்திய ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10 மாதகாலம்: 12,615 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை

கோட்டை,திங்கள்

கடந்த 10 மாத காலத்துக்குள் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தப்படி 12,615 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது

1965-ம் ஆண்டு செய்யப்பட்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் முதல் 1970-ம் ஆண்டுவரை 12,798 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. 7:4 என்ற விகிதாசாரப்படி இந்த ஒப்பந்தம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது

வெளிநாட்டு சொத்து மன்னிப்பு ஜூலை 31 வரை

கோட்டை, செவ்.

அரசாங்கம் வெளிநாட்டிலுள்ள தங்களது சொத்துக்களின் விபரங்களை வெளியிடாதோருக்கு அளித்திருந்த அந்நியசெலாவணி மன்னிப்புக் காலத்தை இவ்வருடம் ஜூலை மாதம் 31-ந் திகதிவரை நீடித்துள்ளது. மே மாதம் 31ந் திகதியுடன் மேற்படி மன்னிப்புக்காலாவதியானதாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. இதையே தற்போது ஜூலை வரை அரசாங்கம் நீடித்துள்ளது.

'கைத்தொழில் விவசாயமே இலங்கைக்கு வேண்டும்'

நீர்கொழும்பு திங்கள்

எமது நாடுபோன்ற ஒரு சிறியநாட்டுக்குகைத்தொழில் விவசாயம் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு கலப்பு பொருளாதாரமே பயனளிக்கும்.

இவ்வாறு கட்டான தொகுதி எம். பி திரு சே. சி. டி சில்வா தனி உற்பத்தி நிலையம் ஒன்றை இத்தொகுதியில் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்,

இவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் பெரிய சிறியஅளவில் கைத்தொழில் நிறுவனங்களை ஸ்தாபித்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதுடன் சிறிய மூலாதாரத்துடன் தொடங்கி பின்தங்கிய பகுதிகளிலுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும் பெற்றோர் பிள்ளைகளை நல்வழியில் வளர்க்க வேண்டுமென்றும் இதற்கு சமயஅறிவுமுக்கியமெனவும் கூறினார்.

கண்ணோய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிய வருகிறது' ஏற்கனவே இதனால் 40,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இந்நோய் பாணந்துறை, கம்பஹா, மாத்தளைப் பகுதிகளில் பரவி வருகிறது. எனவே இவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு வைத்தியசாலைகள் போயாதினங்களில் திறந்து வைக்கப்படுவதுடன் வீட்டு வைத்தியம் செய்யவேண்டாமெனவும் மக்களை சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

5-ந் திகதி கையேற்கப்படும்

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்குகட்டுறவுச் சமாசத்தை இம்மாதம் 5ந் திகதி அரசு பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது இவ்வாறிருக்க திடீர் பரிசோதனைக்குழுவின் நடவடிக்கையைத் தொடர்ந்து களஞ்சியப் பகுதியைச் சேர்ந்த மூவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

அரசு கையேற்கும் 3 சமாஜங்கள்

உடுப்பிட்டி செவ்.

கட்டைவேலிப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜம் கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது, இதற்கான கணக்கு விபரங்களாவும் சமர்ப்பிக்கப்பட்டுக் கூட்டுறவுப் பரிசோதகரால் கையேற்கப்பட்டுள்ளது.

48 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜம் இம்மாதம் 12ந்திகதி 22 ஆரம்ப சங்கங்களாகக் குறைக்கப்பட்டு அரசாங்கத்தால் பாரமெடுக்கப்படவுள்ளது.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கசமாசமும் 12ந் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறைபல நோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜமும் இம்மாதம் 19ம் திகதி அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படவுள்ளது

மண்வெட்டிக்கு விலைக்கட்டுப்பாடு

கோட்டை, செவ்வாய்

மண்வெட்டி விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. நாலு விதமான மண்வெட்டிகள் தரம் பிரிக்கப்பட்டு லங்கா லோக மண்வெட்டிகளின் ஆகக்கூடுதலான விலை 9 ரூபா 50 சதம், 8 ரூபா 70 சதம், 10 ரூபா 25 சதம் யாழ்ப்பாண ரகம் 11 ரூபா 25 சதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.